DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 689/2025

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | ரவி வர்மன் |
| Father's Name | : | மணிகண்டன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 18.11.2025

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், வேலுச்சாமிபுரத்தில் குடியிருந்து மொபைல் சர்வீஸ் கடை வைத்துள்ளேன். சண்முகத்தை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் சண்முகம் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது.

என்னுடன் சண்முகம் கையொப்பம் செய்தார். கடந்த 30.03.2025 அன்று ரவி அண்ணன் வீட்டிற்கு அருகே திருட்டு நடந்தது. 09.05.2025ம் தேதி போலிசார் எதிரிகளை பிடித்துவிட்டதாகவும், காவல் நிலையம் வரச் சொன்னதன் பேரில் நானும், சுப்பிரமணியும் காவல் நிலையம் சென்றோம். அங்கு 2 எதிரிகள் நிலையத்தில் இருந்தனர். கோதூர் பிரிவு ரோட்டில் ஒரு வீட்டில் 22 பவுன், ரூ.80,000/- திருடியதாகவும் கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். அதை ஒரு பெண் காவலர் கணினியில் தட்டச்சு செய்தார். அதில் நானும், சுப்பிரமணியும் கையொப்பம் செய்து கொடுத்தோம். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி குவிமுச பிரிவு 161க்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)**

போலீஸ் விசாரணையில் கடந்த 09.05.2025ம் தேதி கரூர் காவல் நிலையத்தில் போலிசார் 2 எதிரிகளை போலிஸ் காவலில் எடுத்திருப்பதாகவும், அவர்களை எங்கள் முன்னிலையில் விசாரிப்பதற்காக வரச் சொன்னார்கள் என்றால் சரிதான். நானும், சண்முகமும் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். கோதூர் ரோடு, திருவள்ளுவர் நகரில் ஒரு வீட்டில் 22 பவுன் நகை, ரூ.80,000/- பணம் திருடியதாகவும் கூறினார்கள் என்றால் சரிதான். ஆத்தூர் பாலிடெக்னிக் எதிரே ஒரு வீட்டில் 3 பவுன் நகை திருடியதாகவும், அதை உருக்கி கட்டியாக வைத்திருந்ததாகவும், மேலும், 5 1/2 நகைகளை மோகன்ராஜும், கார்த்தியும் கட்டியாக உருக்கி கார்த்திக் த/பெ. சம்பத் பேங்களூரில் வைத்திருந்ததாகவும் கூறினார்கள் என்றால் சரிதான். 2 நபர்களையும் எங்கள் முன்னிலையில்தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

நான் மொபைல் கடையில் வேலை பார்த்து வருகிறேன். சண்முகத்தை எனக்கு 15 வருடமாக தெரியும். நான் கையொப்பம் செய்த தாளில் என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை ரவிதான் கரூர் நகர காவல் நிலையம் அழைத்து சென்றார் என்றால் சரிதான். என்னையும், ரவியையும்தான் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னையும், ரவியையும் போலிசார் விசாரித்தபோது காவல் நிலையத்தில் யார் இருந்தார்கள் என்றும் யாரை விாசரித்தார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் 2 கையொப்பங்கள் செய்து கொடுத்தேன். போலிசார் யாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 2 கையொப்பங்களும் எதற்காக செய்தேன் என்று எனக்கு தெரியாது. ரவி கொடுத்த புகாரிற்காகத்தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். வேறு எதற்காகவும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கரூர் நகர காவல் நிலையத்திற்கு நான் 09.05.2025 அன்று காலை 10.00 க்கு சென்றுவிட்டு காவல் நிலையத்தில் 1 மணி நேரம் இருந்துவிட்டு பின்பு வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பிறகு நான் காவல் நிலையம் செல்லவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

**CC.NO.689/2025**

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**அ.சா.1, ரவி, த/பெ. வெங்கடாசலம், எம்.பி.எண். 1/2025, தேதி 08.10.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. எனக்கு எழுத படிக்க தெரியும். எங்கள் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 3,4 கி.மீட்டர் தொலைவு இருக்கும். இருசக்கர வாகனத்தில் சென்றால் 10, 15 நிமிடத்திற்குள் சென்று விடலாம் என்றால் சரிதான். எனது வீட்டில் நகைகள் காணாமல் போன விவரம் மதியம் 12.45 மணிக்கு தெரிய வந்தது. ஆனால் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் அன்றைய தினம் மதியம் 01.00 – 01.30 மணிக்கு வந்தார்கள். போலிசார் சிசிடிவி கேமரா பதிவுகளை பரிசோதனை செய்தார்கள்என்றால் சரிதான். கைரேகை பதிவுகளை சேகரித்தார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு எதிர்புறம் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எஸ்கேடி மஹால் ஓனர் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள கேமரா பதிவுகள் மற்றும் பெட்ரோல் பங்க் சிசிடிவி கேமரா பதிவுகளை போலிசார் ஆய்வு செய்தார்கள்.

2. எங்களது வீட்டில் 916 நகைகள்தான் இருந்தது என்றால் சரிதான். அனைத்து நகைகளும் செயின் அறுந்த நிலையில் இல்லை, புது நகைகள் ஆகும். நான் முதல் விசாரணையில் காணாமல் போனதாக சொல்லும் நகைகள்தான் எனது வீட்டில் காணாமல் போன நகைகள் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து வாங்கி சென்ற தங்க கட்டி என்னுடைய நகைகளை உருக்கித்தான் கட்டியாக

வைக்கப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திலிருந்து வாங்கி சென்ற செயின் அறுந்த நிலையில் இருந்தது என்றால் சரிதான். நகைகளின் அடையாளங்களை நான் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல எனது நண்பர் எழுதினார். நான் கொடுத்த புகாரில் என்னென்ன நகைகள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

3. சாட்சிகள் குமரேசன், சுப்பிரமணியன், சண்முகம், ரவி வர்மன் ஆகியோர்கள் எனது வீட்டிற்கு அருகிலுள்ளவர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான். போலிசார் சாட்சிகளை கையொப்பம் செய்ய வேண்டும் என்றதால் நான் சண்முகம், ரவி வர்மன் ஆகியோர்களை காவல் நிலையம் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். நான் குமரேசன், சுப்பிரமணியன் ஆகியோரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று சாட்சி கையொப்பம் செய்துவிட்டு அழைத்து வந்துவிட்டேன். சண்முகம், ரவி வர்மன் ஆகியோர்களை காவல் நிலையம் 10.00 லிருந்து 10.30 மணிக்கு அழைத்து சென்று என் முன்னிலையில் கையொப்பம் செய்துவிட்டு அழைத்து வந்துவிட்டேன். ஒரு நாள் மட்டும்தான் அழைத்து சென்றேன். அதன் பின்னிட்டு யாரையும் காவல் நிலையம் அழைத்து செல்லவில்லை.

4. என் வீட்டில் காணாமல் போன நகைகளும் நீதிமன்றத்தில் பெற்று சென்ற நகைகளும் வேறு வேறு என்றால் நகைகட்டி மற்றும் ஒரு சில நகைகள் மாறி இருந்தது. மற்றவை என்னுடைய நகைகள் ஆகும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் நகைகள் காணாமல் போகவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்வது வழக்கம் என்றால் போலிசார் வரச் சொன்னால் செல்வேன். நான் ஆளுங்கட்சியில் இருப்பதால் காவல்

நிலையத்திலிருந்து அழைத்தால் நான் செல்வேன். போலிசார் தயவு வேண்டும் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./—எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

**CC.NO.689/2025**

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**அ.சா.2, மணிமேகலை, க/பெ. ரவி, எம்.பி.எண். 1/2025, தேதி 08.10.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. எனக்கு எழுத படிக்க தெரியும். எங்கள் வீட்டிலிருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 3,4 கி.மீட்டர் தொலைவு இருக்கும். இருசக்கர வாகனத்தில் சென்றால் 10, 15 நிமிடத்திற்குள் சென்று விடலாம் என்றால் சரிதான். எனது வீட்டில் நகைகள் காணாமல் போன விவரம் மதியம் 12.45 மணிக்கு தெரிய வந்தது. ஆனால் அன்றைய தினம் இரவு 09.00 மணியளவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். போலிசார் அன்றைய தினம் மதியம் 01.00 – 01.30 மணிக்கு வந்தார்கள். போலிசார் சிசிடிவி கேமரா பதிவுகளை பரிசோதனை செய்தார்கள்என்றால் சரிதான். கைரேகை பதிவுகளை சேகரித்தார்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு எதிர்புறம் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எஸ்கேடி மஹால் ஓனர் வீட்டில் பொருத்தப்பட்டுள்ள கேமரா பதிவுகள் மற்றும் பெட்ரோல் பங்க் சிசிடிவி கேமரா பதிவுகளை போலிசார் ஆய்வு செய்தார்கள்.

2. எங்களது வீட்டில் 916 நகைகள்தான் இருந்தது என்றால் சரிதான். அனைத்து நகைகளும் செயின் அறுந்த நிலையில் இல்லை, புது நகைகள் ஆகும். என் வீட்டில் காணாமல் போன நகைகளுக்கும் நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்ற நகைகளுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் காணாமல் போனதாக சொல்லும் நகைகள்தான் எனது

வீட்டில் காணாமல் போன நகைகள் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து வாங்கி சென்ற தங்க கட்டி என்னுடைய நகைகளை உருக்கித்தான் கட்டியாக வைக்கப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் குமரேசன், சுப்பிரமணியன், சண்முகம், ரவி வர்மன் ஆகியோர்கள் எனது வீட்டிற்கு அருகிலுள்ளவர்கள் மற்றும் நண்பர்கள் என்றால் சரிதான். எனது கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**